சபரகமுவ மாகாண சபை – 2025

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சபரகமுவ மாகாண சபையின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய குறிப்புகளும் உள்ளடங்கலாக 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2026 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையானது 2026 ஜுன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியானது 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2025 மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறாறு சபரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டு செலவின விடயங்களின் கீழ் செலுத்த வேண்டிய செலவுகள் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் செலவுகளும் பொறுப்புக்களும் ரூபா 28,473,816 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | 2026 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் இந்தத் தவறினைத் திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண சபை வீதிகளைப் சேதப்படுத்துதல் மற்றும் வீதிகளில் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளை மீறிய சுமையுடைய வாகனங்கள் பயணிப்பதற்காக அனுமதி வழங்குகையில் வீதி அமைச்சினால் | எதிர்காலத்தில் மாகாண திறைசேரியுடன் கலந்துரையாடி குறித்த கட்டணத்தினை வருமானத் தலைப்பில் செலவு வைப்பதற்கும் உரிய செலவினத் தலைப்பிலிருந்து | நிதி விதிகளின் பிரகாரம் செயற்பட்டு வைப்புப் பணத்தினை சரியான வருமானத் தலைப்புகளில் செலவு வைத்து |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்த மீளளிக்கப்படாத வைப்புப் பணத் தொகையான ரூபா 11,453,576 பொருத்தமான வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்படாது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் ஆலோசனைக் கொடுப்பனவாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,682,107 தரப்படுத்தப்பட்ட செலவு விடயத்தில் வரவு வைக்கப்படாது வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டில் மாகாண சபையின் வருமானமும் செலவுகளும் முறையே ரூபா 11,453,576 இனாலும் ரூபா 3,682,107 இனாலும் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுகளில் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தினால் மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்டிருந்த ஒப்பந்த பிடிமானத் தொகையான ரூபா 2,638,792 வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாது செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவு அப் பெறுமானத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இப் பிடிமானத் தொகையை வைப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல்வாங்கல்களை நிதிக்கூற்றுகளில் சரியாகச் சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபரகமுவ மாகாண சபை வீதி அமைப்பிற்கு தித்வா சூறாவளி காரணமாக ரூபா 3,684,900,000 சேதம் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் நிதிக்கூற்றுகளின் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான தகவல்களை முன்வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுகளைப் பாதிக்கும் விடயங்களைச் சரியாக வெளிப்படுத்தி நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (உ) | சபரகமுவ மாகாண சபையின் கீழ் உள்ள 09 அமைச்சுகள்/ திணைக்களங்களின் நடைமுறை சாராச் சொத்துக்கள் குறைவாகவும் கூடுதலாகவும் கணக்கு வைக்கப் பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் முடிவில் மாகாண சபை நிதியக் கணக்கில் நடைமுறைசாராச் சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 55,199,949 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2026 ஆம் ஆண்டில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடைமுறேசாராச் சொத்துக்களை மதிப்பிட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாகாண சபையின் 07 அமைச்சுகள்/திணைக்களங்களின் நடைமுறைசாராச் சொத்துக்களை மதிப்பிட்டு கணக்கு வைப்பது மீளாய்வாண்டு முடியும் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுகளிலும் அச்சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன் பொருத்தமானவாறு உரிய வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டின் போது மதிப்பிட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடைமுறைசாராச் சொத்துக்களை மதிப்பிட்டு கணக்கு வைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் முடியும் வரை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | கூட்டுத்தொகை ரூபா 21,355,004 ஆகவிருந்த பொறுப்பு மீதிகள் குறித்த நிதிக்கூற்றுகளில் பிணைப்புக்கள் மற்றும் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்காமையால் மாகாண சபை நிதியத்தின் மீளாய்வாண்டிற்குரிய செலவுகளும் திரட்டிய செலவுகளும் அப்பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | அனைத்துப் பொறுப்புக்களையும் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அனைத்துப் பொறுப்புக்களையும் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுகளில் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால், மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைதிறன் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கருதவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக்கொள்கைகளின் பொருத்ததன்மை, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துதல்களின் பொருத்ததன்மை மதிப்பீடு செய்யப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டன என்பது, மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது.

**1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.5.1 தலைப்பு 800 - ஆளுநர் அலுவலகம்**

**1.5.1.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுநர் செயலகத்திற்குச் சொந்தமான லேண்ட் ரோவர் டிஸ்கவரி ஜீப் வண்டியொன்று 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதியன்று விபத்திற்குள்ளாகி திருத்த வேலைகளுக்காக ரூபா 5,983,937 தொகையினை 2023 திசெம்பர் 30 ஆம் திகதியன்று மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக ஒரு மில்லியன் ரூபாய் பணம் 2023 ஜுன் 29 ஆம் திகதியன்று காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,983,937 ஆகவிருந்த எஞ்சிய பெறுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இக்கொடுப்பனவைத் தவறியமை தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்ட மா அதிபதி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக சபரகமுவ மாகாண பிரதம செயலாளருக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சின் செயலாளரினால் இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கு 2025 ஒக்டோபரில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2026 ஜுலை வரையிலும் எஞ்சிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கும் சபரகமுவ மாகாண சபைக்கும் இடையே மத்தியஸ்தராகச் செயற்பட்டு உரிய காப்புறுதி நட்டஈட்டுப் பணத்தை அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்து தருமாறு பிரதம செயலாளரினால் 2026 ஜனவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஊடாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2026 ஜனவரி 22 ஆம் திகதிய கடிதம் தொடர்பில் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதிலளிப்புக்கள் பற்றி தொடர்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் தீர்வு கிடைக்கவில்லையாயின் எதிர்கால சட்ட நடவடிக்கைகளுக்குச் செல்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 802 - மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்

#### 1.5.2.1 பதவியணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் தொகுதி I இன் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் படி, பதில் கடமை நியமனமொன்று, நிரந்தர நியமனமொன்றைச் செய்யும் வரை தற்காலிக தீர்வாக மட்டுமே செய்யப்பட வேண்டும் என்பதுடன் பதவிக்கு முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையாயின் நிரந்தர நியமனம் தாமதமின்றி செய்யப்பட வேண்டும். முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையில்லையாயின் 13.2 உபபிரிவின் படி திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கிடையே கடமைகளைப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், 2005 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக நிலவிவரும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் பதவி ஒன்றிற்காக 20 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதிக்கு பதில்க்கடமையாற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | இவ்வலுவலகத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்காகவும் பரீட்சைப் பிரிவின் நடவடிக்கைகளுக்காகவும் இரண்டு உதவிச் செயலாளர் பதவிகள் நிறுவன மற்றும் பரீட்சை என்றவாறு நிலவுவது அத்தியாவசியமானதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையாயின் நிரந்தர நியமனத்தை தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 804 – மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்

#### 1.5.3.1 செயற்பாட்டுத் திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 03 முதல் 07 வரை இந்தியாவில் லக்னோவில் நடைபெற்ற 25 ஆவது சர்வதேச மாணவர் தரவட்டம் மாநாட்டில் | 01/2015/01 இன் 03 (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதாவது, | அதிகாரப்பூர்வ தூதுப் பணியொன்றிற்காக வெளிநாடு செல்லும் போது வெளிநாட்டு வளங்கள் |

| | | |
|---|---|---|
| பங்கேற்றிருந்த கல்வி அமைச்சின் 08 உத்தியோகத்தர்களுக்கு நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுச் செயலாளரின் 2023 மார்ச் 20 ஆம் திகதியிட்ட இல. MF/06/23/50/2023 கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2015 மே 10 ஆம் திகதிய இல. மு.அ.01/2015/01 சுற்றறிக்கை யின் 03 (அ) பிரிவின் பிரகாரம் ஒரு நாளைக்குச் செலுத்தப்பட வேண்டிய 25 அமெரிக்க டொலரை விட மேலதிகமாக அமையப் படியாக நாளொன்றிற்கு 40 அமெரிக்க டொலர் வீதம் 09 நாட்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தமையால் 1080 அமெரிக்க டொலர் (ரூபா 322,498) மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், மேற்குறித்த மாநாடு 2024 திசெம்பர் 03 முதல் திசெம்பர் 07 வரை நடாத்தப்பட்டிருந்த போதிலும், புறப்படுதல் மற்றும் மீளத்திரும்பல் முறையே திசெம்பர் 01 மற்றும் 10 என விமானப் பயணப் பதிவுகள் செய்யப்பட்டிருந்தமையால் வெளிநாட்டு விடுமுறை நாட்கள் 02 மேலதிகமாக வழங்கப்பட்டு அதற்காக அமையப் படியாக 400 அமெரிக்க டொலர் அதாவது, ரூபா 119,445 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | “அதிகாரப்பூர்வ தூதுப் பணியொன்றிற்காக அல்லது நாட்டினுள் நிறைவேற்ற முடியாத நிறுவனத்தின் விடயப் பரப்பிற்குரிய கடமைப் பணியொன்றிற்காக அல்லது பணியொன்றிற்காக அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடு செல்லும் போது அமையப் படிகளைச் செலுத்துதல்” என்பதன் கீழ் அனுமதி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு இராஜதந்திர அதிகாரப்பூர்வ அழைப்பொன்றும் இருத்தல் வேண்டும். சர்வதேச மாணவர் தரவட்டம் மாநாடு அத்தகைய அதிகாரப்பூர்வ தூதரகப் பணியாக இல்லாததனால் அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள படிகள் மீள அறவிடப்பட வேண்டும். |

### 1.5.3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றிராமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதம செயலாளர் செலவுத் தலைப்பிற்காக மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் நெகிழ்ச்சியான நிதியம் மற்றும் சிறப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 120 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 501 மில்லியன் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 186.85 மில்லியனைக் கொண்ட 87 செயற்திட்டங்கள் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சபரகமுவ மாகாணத்திற்காக முறையான அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கும் சாத்தியவள ஆய்வுகளை நிறைவு செய்து நிதி |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரமே நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன. அதற்கமைய மொத்த ஒதுக்கீட்டில் 63 சதவீதம் 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது எஞ்சியிருந்தது. 2025 திசெம்பர் 31 வரையில் உரிய அனைத்து வேலை விடயங்களும் நடைமுறைப்படுத்தி முடிப்பதற்கும், செயற்திட்டங் களை கைவிடாமல் இருப்பதற்கும் பிரதம செயலாளரினால் நிதி ஒதுக்கீடு செய்து தரும் சந்தர்ப்பத்திலேயே அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய செயற்பட்டிராததுடன், அபிவிருத்தி யோசனைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் அச்செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் சாத்தியக்கூறு பற்றிய முன் மதிப்பீடொன்றைச் செய்யாதிருந்தமையும் நிதி எஞ்சுவதற்குக் காரணமாகியிருந்தது. | | ஒதுக்கீடுகளை மேற்கொள்வதன் மூலம் அதிகபட்ச வினைத்திறனுடன் நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபரகமுவ மாகாண சபைக்குச் சொந்தமான பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைக் கட்டிடக் கூரைகளின் மேல் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றிற்காக பிரதம செயலாளரினால் 2022 செப்தெம்பர் 01 ஆம் திகதியன்று தனியார் நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் மூலம் ஆண்டிற்கு 40 மெகாவாட் மின் உற்பத்தியின் மூலம் 20 ஆண்டுகளில் ரூபா 19,147 மில்லியன் மொத்த வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், அதில் சபரகமுவ மாகாண சபைக்கு ரூபா 2,910 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆயினும், மீளாய்வாண்டு முடிவின் போது 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மின் உற்பத்தி 10 மெகாவாட் மட்டுமேயாகும். ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு | இலக்கு வைக்கப்பட்ட வருமான மட்டங்களை அடைய முடியாமல் போனமைக்குக் காரணமான முறைமை அமைப்புகளின் தாமதம் தொடர்ந்தும் தீவிரமாக நிலவுவது அரச வரிப் கொள்கை மாற்றம் மற்றும் இலங்கை மின்சார சபையின் முதலீட்டுக் கொள்கை மாற்றம் ஆகிய வெளிவாரி காரணிகள் முதன்மையாக அமைவதாலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்பட வைத்து செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வருடத்திற்குள் மாகாணத்தினுள் அமைந்துள்ள 1,124 பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைக் கட்டிடக் கூரைகளின் மீது சூரிய மின் உற்பத்தி முறைமைகளைப் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 135 பாடசாலைகளிலும் 05 வைத்தியசாலைகளிலும் மாத்திரமே அம் முறைமைகள் பொருத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைய முடியாமற் போயிருந்தது.

### 1.5.4 தலைப்பு 807 - பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்)

#### 1.5.4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளைப் பெற்றிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2025 சபரகமுவ மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தின் (திருத்தப்பட்ட) படி 10 அங்கங்களின் கீழ் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 246.6 மில்லியன் ஆகவிருந்த 103 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் போதும் சாத்தியக்கூறு ஆய்வுப் படியின் போதும் சிறப்பு அவதானம் செலுத்தப்பட வேண்டிய அரசின் பல்வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய அனுமதிகள் மற்றும் உடன்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை குறித்து அவதானம் செலுத்தாமல் அத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையும் அத்துடன் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் காலஎல்லை திட்டமிடப் பட்டிருக்காமையும் இதற்குக் காரணமாகியிருந்தன. | ஒவ்வொரு அங்கங்களுக்கும் உரியவாறு இரத்துச் செய்யப்பட்ட கைத்தொழில்களின் பட்டியல்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் முறையான வகையில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அத்திட்டங்களை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 809 - மாகாண வருமானத் திணைக்களம்

#### 1.5.5.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டின் நிலுவை வருமானம் ரூபா 111,618,421 ஆகவிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவில் நிலுவை ரூபா 129,125,567 ஆக அமைந்தமையினால் நிலுவை வருமானம் 15.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 129,125,566 நிலுவை வரி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிட வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சாசனத்தினால் திருத்தப்பட்ட சபரகமுவ மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க முத்திரைக்கட்டணத் திருத்தக் கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம், மாகாண சபை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ள முத்திரைக் கட்டண வருமானம் அந்தந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் வேண்டுகோளின் பேரிலும் மாகாண வருமான ஆணையாளரினால் சான்றளிக்கப் பட்ட அட்டவணைகளின் பேரிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டிய போதிலும், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய 02 மாவட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் கோரப்பட்ட 230 அட்டவணைகளுக்குரிய ரூபா 9,516,909 உம், 2025 ஆம் ஆண்டிற்காக கோரப்பட்ட 401 அட்டவணைகளுக்குரிய ரூபா 40,780,379 உம் என 631 அட்டவணைகளுக்கான ரூபா 50,297,288 தொகை அட்டவணைகளில் உள்ள தவறுகளைத் திருத்துவதிலான தாமதமானமையினால் 2026 ஏப்ரல் 30 ஆம் திகதியிலும் திருப்பி அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அட்டவணைகளில் ஒரே உறுதி மற்றும் அதற்குரிய முத்திரைக்கட்டணம் பலமுறை குறிக்கப்பட்டிருந்தமை, ஏனைய மாகாணங்களில் அமைந்துள்ள அசையாச் சொத்துக்களுக்காக எழுதப்பட்ட உறுதிகளின் விபரங்கள் குறிக்கப்பட்டிருந்தமை மற்றும் சொத்து சபரகமுவ மாகாணத்தில் அமைந்திருந்த போதிலும் முத்திரைக்கட்டணம் ஏனைய மாகாணங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தமை, அட்டவணைகளில் உள்ள கணிதவியல் தவறுகள் மற்றும் ஏனைய விடயங்கள் காரணமாக மீண்டும் பரிசீலித்து திருத்துவதற்காக உரிய காணிப் பதிவகங்களுக்கு அட்டவணைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள வருமானம் திரட்டும் அதிகளவிலான கடமைகள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய கட்டளைச் சட்டத்தின் படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தாக வேண்டிய முத்திரைக் கட்டணங்களை தாமதமின்றி குறித்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6 தலைப்பு 810 - சட்டம் ஒழுங்கு, நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதாரம், உள்நாட்டு மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், தகவல், வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் மத விவகாரங்கள் மாகாண அமைச்சு**

**1.5.6.1 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் - 2024 இன் கீழ் இரத்தினபுரி புதுநகர் நகரப் பூங்காவை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2024 ஜூலை 11 ஆம் திகதியன்று அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்கள், உழைப்பு மற்றும் இயந்திரத் தேவையைத் தீர்மானிப்பதற்காக மதிப்பீடொன்றைத் தயாரித்து அனுமதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்டத்தின் சார்பாக 2024 மார்ச் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்த ஆரம்ப விழாவிற்காக மாகாண பிரதம செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் 2024 ஜனவரி 10 ஆம் திகதிய இல. 01/2024 தேசிய வரவுசெலவுச் சுற்றறிக்கையின் 12.3 உபபிரிவிற்கு முரணாக இரத்தினபுரி மாநகர சபை நிதியத்திலிருந்து ரூபா 944,050 செலவிடப்பட்டிருந்தது. | ஆரம்ப விழா தொடர்பில் நகர ஆணையாளரிடமிருந்து விடயங்களைக் வினவி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 3M திட்டம் தொடர்பில் பிரதிப் பிரதம செயலாளரிடம் (பொறியியல் சேவைகள்) விடயங்களை வினவி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுட்டிக்காட்டப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். நேரடி உழைப்பு அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் கிரயக் கட்டுப்பாட்டிற்காக பொருட்கள், உழைப்பு மற்றும் இயந்திரங்கள் (3M) மதிப்பீடுகளைத் தயாரித்து அனுமதித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | நகரப் பூங்காவின் நிர்மாண வேலைகள் 2024 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2026 மே 10 ஆம் திகதியாகின்ற போதும் அதன் வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை என்பதுடன் நிர்மாண நிலப்பரப்பு காடடர்ந்து காணப்பட்டது. 2024 திசெம்பர் | உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பெறப்பட்ட சுமார் ரூபா 60 மில்லியன் நிதி ஒதுக்கீடு 2024 ஆம் ஆண்டில் செலவிடப்பட வேண்டியிருந்தமையாலும் எதிர்காலத்தில் கொள்வனவுகளுக்காக நிதி ஒதுக்கீடுகளைப் | நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு அமைவாக நகரப் பூங்கா நிர்மாண வேலைகளை முடிப்பதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 ஆம் திகதியன்று ரூபா 6,440,440 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த சிறுவர் பூங்கா மற்றும் உடற்பயிற்சிப் பிரிவின் உபகரணங்கள் மற்றும் ரூபா 4,083,815 பெறுமதியான இறப்பர் ஓடுகளின் இருப்பும் பயன்பாடின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | பெற்றுக் கொள்வது கடினம் என்பதனாலும் உரிய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரையிலும் நிர்மாண வேலைகள் நடைபெற்று வருவதால் அவ் உபகரணங்களுக்கு சேதம் ஏற்படக்கூடும் என்பதால் பொருத்தப்பட்டிராததுடன் நிர்மாண வேலைகள் முடிவடைந்த பின்னர் பொருத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.6.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ”2021 - 2030 இரத்தினபுரி நகர அபிவிருத்தித் திட்டத்தின்” கீழ் இனங்காணப்பட்டிருந்த இரத்தினபுரி புதுநகர் பேருந்து நிலைய நிர்மாணச் செயற்திட்டத்திற்காக 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகின்ற போது ரூபா 94.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த நிலையில், அச்செயற்திட்டம் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய அரசின் கொள்கைகளுடன் இணங்கவில்லை எனக் குறிப்பிட்டு அக்காணியில் அத்தியாவசிய வேலைப் பகுதிகளை நிறைவு செய்து பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து அக்காணி மற்றும் நிர்மாணங்களை வேறொரு பொருளாதார மற்றும் சமூக ரீதியாகப் பயனுள்ள பணிக்குப்பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், 2026 ஆகஸ்ட் 25 வரையிலும் அது பயன்பாடற்றுக் காணப்பட்டதுடன், சிட்டைகள் மற்றும் பௌதீகப் பரிசோதனையின் போதும் பெறப்பட்ட அளவீடுகளின் படி பூர்த்தி செய்யப்பட்டிருந்த | நிர்மாணக் குறைபாடுகள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விடயங்களை வினவி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு மற்றும் அக்காணியைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான பணியொன்று அல்லது செயற்திட்ட மொன்றை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோன்று, மேலதிக கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைப் பகுதிகளுக்கு அமைவாக ரூபா 2,234,296 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று கரையான் கட்டுப்படுத்தும் சிகிச்சை தோல்வியடைந்தமையால் அதற்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 548,991 உம் வீண் செலவினமாகியிருந்தது. | | |
| (ஆ) | முறையான தேவைப்பாட்டு ஆய்வின்றி 2015 ஆம் ஆண்டில் ரூபா 58,308,411 செலவிட்டு 14 கம்பேக்டர் (Compactor) இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சபரகமுவ மாகாணத்தின் 14 உளளூராட்சி மன்றங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வியந்திரங்கள் மலைச்சாய்வுகளையுடைய குறுகிய வீதிகளில் செலுத்துவதற்குப் பொருத்தமற்ற அகலத்தையும் நிறையையும் கொண்டிருந்தமையினால் அதில் 13 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டன. | இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் புலனாய்வொன்றை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆளுநரின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இயக்க முடியாது என்பது பற்றி பரிசோதித்துப் பார்த்து விரிவான அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதம செயலாளரினால் மூன்று உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பிரதம செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் புலனாய்வை விரைவுபடுத்தி முறையான நடைமுறையொன்றைப் பின்பற்றி சொத்துக்களிலிருந்து பயனைப் பெறுவதற்கு அல்லது உரிய நிறுவனமொன்றிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் விரைவாக அதிகரித்த உள்ளீட்டு விலைகள் 2023 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் குறையும் போக்கைக் காண்பித்த போதிலும், அது குறித்து கவனத்திற் கொள்ளாமையினால் 07 செயற்திட்டங்களின் விலை வேறுபாடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,730,655 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் ஒப்பந்த நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக விலை வேறுபாட்டின் மீது ஏற்பட்டுள்ள மேலதிகக் கொடுப்பனவை மீளச் செலுத்துமாறு உரிய ஒப்பந்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. விலை வேறுபாட்டைச் சீராக்கிப் பின்னர் முன்வைக்கப்பட்ட அனைத்துச் சீட்டைகளிலிருந்தும் | மேலதிகக் கொடுப்பனவுகள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அல்லது பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உரிய விலை வேறுபாடுகள் மீள அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.6.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் பிரதான அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களில் ஏற்பட்டிருந்த 25 விபத்துக்களுக்குரிய ரூபா 10,310,280 கூட்டுத்தொகையான நட்டம் தொடர்பில் சபரகமுவ மாகாண நிதிய விதிப்பிரமாணத்தின் 54.1 ஆம் விதியின் பிரகாரம் செயற்பட்டு பொறுப்புடைய தரப்பினரிடமிருந்து அவற்றை அறவிட்டுக்கொள்வதற்கோ அல்லது முறையான அனுமதியின் பேரில் பதிவழிப்பதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவசர விபத்துக்களுக்கு மேலதிகமாக சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் குறிப்பிடப் பட்டுள்ள விபத்துக்களுக் குரிய பரிசோதனை வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஜீப் வண்டியின் சேதப் பெறுமதியான ரூபா 8,961,340 பணத்தைக் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் பிரதம செயலாளர் அலுவலகத் தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுட்டிக்காட்டப்பட்ட விதியின் படி தாமதமின்றி செயற்பட்டு பொறுப்புடைய தரப்பினரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது முறையான அனுமதியின் பேரில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6.4 சபரகமுவ அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திரத்தொகுதி அதிகாரசபை**

**1.5.6.4.1 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வின் படி மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 25,453,949 ஆகவிருந்ததுடன், மூன்று கடன்பட்டோருக்குரிய ரூபா 10,551,499 அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஒரு நிறுவனம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6.5 சபரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

#### 1.5.6.5.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | சபரகமுவ மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 09 மற்றும் 19 ஆம் பந்திகள் | அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த 67 பேருந்துகள் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்திராததுடன் உரிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் மிகைக் கட்டணத் தொகையான ரூபா 811,900 வை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கட்டளைச் சட்டத்தின் படி செயற்பட்டு பயணிகள் சேவைப் பேருந்து அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கும் கட்டணங்கள் மற்றும் மேலதிகக் கட்டணப் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபரகமுவ மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 30(1) மற்றும் 30(2) ஆம் பந்திகள் | கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பந்தியின் பிரகாரம் விதிக்கப்படும் வீதிப் பரிசோதகர் தண்டப் பணம் மற்றும் அத்தண்டப் பணத்தைச் செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களுக்கான மிகைக் கட்டணங்களை அறவிடுதல் தொடர்பில் விதிகளை உருவாக்கி வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசித்திப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் சபரகமுவ மாகாண சபை நிறுவப்படாமையால் எதிர்காலத்தில் அதிகாரசபையின் விதிகளை வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசித்திப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள தண்டப்பணத் திருத்தத்தையும் எமது அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய விதிகளை உருவாக்கி வர்த்தமானி மூலம் பிரசித்திப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.6.5.2 போதுமான அதிகாரப் பொறுப்பால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத 03 பதவிகளுக்காக 07 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 06 பேரின் நியமனங்களை பணிப்பாளர் சபை அங்கீகரித்திருக்கவில்லை. | இது தொடர்பில் ஆரம்ப விசாரணை ஒன்று பிரதான அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணையை விரைவுபடுத்தி பணிப்பாளர் சபை அனுமதியின்றி ஆட்சேர்ப்புச் செய்தமை தொடர்பிலும் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பரிசோதிக்கப்பட்ட 53 வீதி அனுமதிப்பத்திரங்களின் மாதிரித் தெரிவின் படி, புதிய வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பெறுகை நடைமுறையைப் பின்பற்றாது பல்வேறு தரப்பினரின் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு 44 புதிய வீதி அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப் பட்டிருந்தன. அதேபோன்று, பணிப்பாளர் சபையின் தீர்மானமின்றி புதிய அனுமதிப்பத்திரக் கட்டணக் குறைந்தபட்சம் ரூபா 50,000 இலிருந்து ரூபா 200,000 வரை அறவிடப்பட்டிருந்தது. | குழுவொன்றின் மூலம் விசாரணையை மேற்கொண்டு உரிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 47 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விசாரணையை விரைவுபடுத்தி பொறுப்புடைய தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6.5.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிலுவை பயணப் பதிவேட்டு வருமானம் ரூபா 3,167,600 ஆகவிருந்ததுடன் அதில் 27 பேருந்துகளுக்குரிய ரூபா 696,850 தொகை 13 முதல் 57 மாதகாலமாக நிலுவையாகவிருந்தது. | சிக்கனமற்றதானமையால் இந்த அனுமதிப்பத்திர பேருந்துகள் தொழிலிலிருந்து நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாணங்களுக்கிடையே நுழைவிற்காக 53 பேருந்துகளிலிருந்து ரூபா 3,447,400 நிலுவையாகவிருந்ததுடன் அதில் 26 பேருந்துகளுக்காக ரூபா 2,830,900 ஆகவிருந்த நுழைவுக் கட்டணம் 13 முதல் 57 மாதகாலமாக நிலுவையாகவிருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெறவேண்டிய கடைக் வாடகை வருமானப் பதிவேட்டின் படி 65 கடைகளுக்குரிய ரூபா 3,911,356 பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடை வாடகையை விரைவாக அறவிட வேண்டும். |
| (ஈ) | அனுமதிப்பத்திரம் பெற்று இயக்கப்படாத 138 பேருந்துகள் நிலவியமையினால் பயணிகளுக்குப் போதுமான போக்குவரத்துச் சேவையை வழங்கும் நோக்கம் நிறைவேறாமலிருந்தது. எனினும், அவ்அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து புதிய அனுமதிப்பத்திரங்களை வெளியிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் மூலமாகவும் மிகவும் சரியான பெயர்ப்பட்டியலையொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு 2023 மார்ச் 21 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இயக்கப்படாத பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6.5.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 118 ஆகவிருந்த போதிலும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சேவையிலீடுபட்டிருந்தோரின் எண்ணிக்கை 149 ஆக இருந்தமையால் 31 பேர் மேலதிகமாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பல சந்தர்ப்பங்களிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து மேலதிக ஊழியர்களை அங்கீகரித்துக் கொள்ள முயற்சித்தும் அது தோல்வியடைந்தது. மீண்டும் 2026 மார்ச் 09 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து மேலதிக ஊழியர்களை அங்கீகரித்துக்கொள்வதற்குத் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சமநிலைப்படுத்துவதற்கும் அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தேவையான வசதிகளைச் செய்து தருமாறு பிரதான அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும், கோவைகளில் குறைபாடுகள் நிலவியமையினால் அவற்றைச் சீராக்கி அனுப்புமாறு அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.6.6 பின்னவலை பண்டைய கிராமத் தீம் பூங்கா**

**1.5.6.6.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்ட வருமானமாக ரூபா 558,750 கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வருமானம் ரூபா 39,000 வரை குறைந்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 93 சதவீதக் குறைவாகக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**1.5.6.6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிறுவனத்தின் வங்கிப்புக் கணக்கில் ரூபா 4,852,947 மீதி நிலவிய போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் போதுமான பணத்தைத் தக்கவைத்துக்கொண்டு எஞ்சிய மீதியைப் பயனுள்ள வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகப் பணத்தை முதலிடுவதற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

1.5.6.7 வீடமைப்பு அபிவிருத்தி நிதியம்

1.5.6.7.1சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1993 திசெம்பர் 23 ஆம் திகதி முதல் மாகாண சபை கலைக்கப்பட்ட 2017 செப்தெம்பர் 26 ஆம் திகதி வரையிலான 14 ஆண்டுகள் இயங்கு நிலையில் பேணப்பட்டு வந்திருந்த போதிலும், 1993 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சபரகமுவ மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தை நிறுவுதல் பற்றிய கட்டளைச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பணத்தைப் முதலீடு செய்யும் முறைகள் பற்றிய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரமாணங்கள்களைத் தயாரிக்கும் அதிகாரம் அமைச்சருக்குரியது என்பதால் மீண்டும் மாகாண சபை நிறுவப்பட்ட பின்னர் அமைச்சருடன் கலந்துரையாடி நிதியத்தின் பணத்தை முதலீடு செய்வதற்கான பிரமாணங்கள்களைத் தயாரித்து அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது | நிதியத்தின் பண முதலீடு பற்றிய பிரமாணங்கள்களைத் தயாரித்து அதற்கமைய செயற்பட வேண்டும். |

1.5.7 தலைப்பு 811 - மாகாண சுகாதாரத் திணைக்களம்

1.5.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 திசெம்பர் 21 ஆம் திகதியிட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 02/2017 இன் 02 ஆம் பந்தி | சபரகமுவ மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள 21 வாகனங்களின் உரிமையை திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.5.7.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலங்கொட மற்றும் கரவனெல்ல ஆதார வைத்தியசாலைகள் A தர ஆதார வைத்தியசாலைகளாகவும் எஹெலியகொட, கொலன்ன, களவானை, கஹவத்தை மற்றும் வரகாபொல ஆகிய ஆதார வைத்தியசாலைகள் B தர | வைத்தியசாலைகளின் தரத்தை உயர்த்தும் போது ஊழியர்களின் எண்ணிக்கை உடனடியாக நாளதுவரையாக்கப்படுவதில்லை என்பதுடன், ஊழியர்களின் எண்ணிக்கையைத் | சுகாதார அமைச்சின் செயலாளரின் 2021 திசெம்பர் 27 ஆம் திகதியிட்ட பொதுச் சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைகளாகவும் தரப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சுகாதார அமைச்சின் செயலாளரின் 2021 திசெம்பர் 27 ஆம் திகதியிட்ட பொதுச் சுற்றறிக்கை இலக்கம் 01-18-2020(1) இன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த A மற்றும் B தர ஆதார வைத்தியசாலை யொன்றில் இருக்க வேண்டிய வசதிகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்காக முதன்மைக் கலந்துரையாடல்கள் 2025 இல் நடாத்தப்பட்ட போதிலும் இதுவரை அதற்கு அனுமதி கிடைக்கப்பெறவில்லை. இது மாகாண சபையினால் மட்டும் மேற்கொள்ளப்படக் கூடிய விடயமல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இலக்கம் 01-18-2020(1) இன் பிரகாரம் தேவையான வசதிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கஹவத்தை வைத்தியசாலையில் 2025 திசெம்பர் 23 ஆம் திகதி வரையில் மருத்துவப் மருந்தகம் (Clinic Pharmacy), வெளிநோயாளர் மருந்தகம் (OPD Pharmacy) மற்றும் உள்நோயாளர் மருந்தகம் (Indoor Pharmacy) என்பவற்றில் நோயாளர் சிகிச்சைகளுக்காக நிரந்தரமாகத் தேவைப்படும் 71 மருந்துகள் 01 மாதம் முதல் 04 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்கு பூச்சிய நிலையில் நிலவின. இதனால் சிகிச்சைகளைப் பெற வரும் நோயாளர்கள் அம்மருந்துகளை வெளியிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான இருப்புகள் மத்திய மருந்துக் களஞ்சியத்திற்கு கிடைத்த பின்னர் பிராந்திய மருத்துவ விநியோகப் பிரிவுகளினால் அவ் இருப்புகள் உரிய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் என்றும், இது தேசிய மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நோயாளர் பராமரிப்புச் சேவைக்குத் தேவையான மருந்துகளைத் தாமதமின்றி மதிப்பிட்டு கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7.3 தாமதமான செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலங்கொட ஆதார வைத்தியசாலையின் மூன்று மாடிக் கட்டிடத்தைப் புனரமைத்தல் ரூபா 36,122,398 ஒப்பந்தப் பெறுமதிக்கு ஓராண்டிற்குள் நிறைவு செய்வதற்காக 2020 நவெம்பர் 03 ஆம் திகதியன்று உடன்படிக்கையிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 3,994,211 பெறுமதியான வேலைகள் நிறைவு செய்யப்பட்டதை அடுத்து 2022 நவெம்பர் 25 ஆம் திகதியன்று ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதியன்று ரூபா 23,637,905 ஒப்பந்தப் பெறுமதிக்கு அபிவிருத்தி | கீழ் மாடியின் வேலைகள் இவ்வருடத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது, எஞ்சிய மாடிகளின் நிர்மாணம் ஆசிய அபிவிருத்தி வங்கிப் கடனின் கீழ் கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு எஞ்சிய வேலைகளை நிறைவு செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வடிவமைப்பு மற்றும் இயந்திரத்தொகுதி அதிகாரசபையுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 17,078,214 பெறுமதியான வேலைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் மீண்டும் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | பலங்கொட ஆதார வைத்தியசாலையின் ஐந்து மாடித் தங்குமிட அறைக்கான கட்டிடத்தை நிர்மாணிக்கும் கைத்தொழில் ரூபா 54,728,057 வேலைப் பெறுமதிக்கு 2022 ஏப்ரல் 05 ஆம் திகதிக்கு முன்னர் வேலைகளை நிறைவு செய்வதற்காக 2021 ஜூன் 05 ஆம் திகதியன்று உடன்படிக்கையிடப்பட்டிருந்தது. பின்னர் பல சந்தர்ப்பங்களில் 2024 திசெம்பர் 15 வரை கால நீடிப்புகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடியும் வரையிலும் அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2025 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வரையில் ரூபா 46,455,434 செலவில் கீழ் மாடி மற்றும் முதலாம் மாடி மட்டுமே வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன என்பதுடன் எஞ்சிய மாடிகளுக்குச் சட்டகம் மற்றும் கூரை மட்டுமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | இக்கட்டிடத்தின் எஞ்சிய வேலைகள் 2026 ஆம் ஆண்டு முதல் 2030 வரை நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடக்கி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்டுள்ளவாறு கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7.4 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சுகாதார அமைச்சினால் ஹேவாயின்ன சுகாதார மையத்தின் இருமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2022 ஆம் ஆண்டு வரையில் ரூபா 13.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாணடின் முடிவின் வரையிலும் காணியின் எல்லைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்காமையால் | இவ்வருடத்தின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்யப்பட்டு இயங்கு நிலைக்குக் கொண்டுவரும் இயலுமை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காணியின் எல்லைகள் பற்றிய பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டு நிர்மாண வேலைகளை முடிப்பதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிட நிர்மாண வேலைகள் அரைகுறையாக நிறுத்தப்பட்டிருந்தன. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7.5 விளைவற்ற / குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபரகமுவ மாகாண பிரதான அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் ரூபா 6.4 மில்லியன் செலவிட்டு இரக்வானை, கொடகவெல பிராந்திய வைத்திய சாலைகளுக்காக கதிரியக்கப் பிரிவுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எனினும் அப்பிரிவிற்குத் தேவையான கதிரியக்கப் நிபுணர்கள் இதுவரை இணைக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டு முடிவின் போதும் குறித்த பௌதீக வளங்கள் அனைத்தும் பயன்பாடற்றுக் காணப்பட்டன. | கொடகவெல வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டுள்ள உபகரணங்களை அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தற்போது பதவியணி மீளாய்வு செய்யப்பட்டுள்ள தால் புதிய பதவியணி கிடைக்கும் வரை இவ் உபகரணங்களைத் தற்காலிகமாக வேறொரு வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான இயலுமையைக் கண்டறிந்து அறிக்கையிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய உபகரணங்களைப் பயன்பாடின்றி வைக்காது ஏனைய வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கு அல்லது தேவையான பதவியணியைக் கோரி சொத்துக்களிலிருந்து பிரயோஜனத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் இராணுவத்தின் உழைப்புப் பங்களிப்புடன் நிறுவப்பட்டிருந்த கஹவத்தை ஆதார வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவிற்குப் போதுமான பதவியணி இல்லாமை மற்றும் தேவையான உபகரணங்கள் (Patient Monitor, Infusion Pump) கிடைக்கப் பெறாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. ஆதன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 08 தீவிர சிகிச்சை (ICU) கட்டில்கள் மற்றும் 04 Ventilator என்பன 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகின்ற போதும் பயன்பாடற்றுக் காணப்பட்டன. | புதிய பதவியணி அங்கீகரிக்கப்பட்டு புதிய ஆட்சேர்ப்புகள் செய்யப்படும் போது இப் பிரிவை இயங்கு நிலைக்குக் கொண்டுவரும் இயலுமை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | புதிய பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்புகளுக்குமான தேவையான நடவடிக்கைகளை எடுத்து தீவிர சிகிச்சைப் பிரிவைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். |

### 1.5.7.6 பதவியணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சபரகமுவ மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 69 பதவிகளில் 701 உத்தியோகத்தர்கள் வெற்றிட நிலையில் இருந்ததுடன் கஹவத்தை ஆதார வைத்தியசாலையின் நிஜப் பதவியணியினுள் அடங்கியுள்ள 03 பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய அமைச்சினால் வெற்றிடங்களைக் கோரப்படுவதுடன் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அளவிற்கு அமைவாக இம்மாகாணத்திற்காக உத்தியோகத்தர்கள் இணைக்கப்படுவார்கள் என்றும், உள்ளக உயர்வுகளின் மூலம் சபரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகளுக்குத் தேவையான தகவல்கள் கோரப்படும் சந்தர்ப்பங்களில் வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் அங்கீகரிக்கப்படாத பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7.7 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலங்கொட ஆதார வைத்தியசாலையின் கழிவுநீர் அமைப்பு தொடர்ச்சியாக அடைப்புகளுக்கு உள்ளானமையினால், தொற்றடைந்த நீர் மற்றும் கழிவுநீர் அமைப்பின் நீர் ஆற்றுடனும் சுற்றாடலுடனும் கலப்பதனால் சுற்றாடல் சேதத்திற்குட்பட்டிருந்தது. கழிவுநீர் சுத்திகரிப்புப் பிரிவுகளை நிறுவித் தருமாறு பலங்கொட, மாவனல்லை மற்றும் கரவனெல்ல வைத்தியசாலைகளினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டு அதற்காக மாகாண சிறப்பு அபிவிருத்தி மானியங்களின் கீழ் 2024 ஆம் ஆண்டிலும் 2025 ஆம் ஆண்டிலும் முறையே ரூபா 15 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியின் போதும் அச்செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் தேவையான நிபுணத்துவ சேவையை வழங்குவதற்காக மொத்த மதிப்பீட்டில் 11.5 சதவீதத்தைக் கோரினர். அத்தொகை மாகாண சபையினால் ஏற்கக்கூடிய அளவை விட அதிக சதவீதமாக இருந்தமையினால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. பின்னர் சுற்றாடல் அமைச்சருடன் கலந்துரையாடி அமைச்சரவைத் தீர்மானமொன்றை எடுப்பதற்கு உடன்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.<br><br>இவ்விடயம் தொடர்ந்து தீர்வின்றி நிலவுவதால் சுகாதார அமைச்சில் பதிவு செய்யப் பட்டுள்ள பாடப் பரப்பிற்குரிய நிபுணத்துவ உத்தியோகத்தர் களின் பட்டியலிலுள்ளவர்களிடம் இருந்து தொழில்நுட்ப அறிவைப் | கழிவுநீர் அமைப்புகளை முறையான வகையில் பராமரிப்பதற்கும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பிரிவுகளை நிறுவுவதற்கும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கஹவத்தை ஆதார வைத்தியசாலையின் விடுதிகள்/ பிரிவுகளிலிருந்து அகற்றப்படும் சிறிய கண்ணாடிப் போத்தல்களை அகற்றுவதற்கான முறையியல் இல்லாமை மற்றும் ஐஉெைநெசயவழச இயந்திரத்தின் மூலம் எரிக்கப்படும் கழிவுகளிலிருந்து எஞ்சும் சாம்பலை இடுவதற்குப் போதுமான குழிகள் இன்மையால் சடலக் களஞ்சியத்திற்கு அருகிலும் Incinerator இயந்திரத்திற்கு முன்னாலும் அவை குவித்து வைக்கப்பட்டிருந்தன. வைத்தியசாலைகள் மற்றும் முதன்மை மருத்துவப் பராமரிப்புப் பிரிவுகளிலிருந்து கஹவத்தை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும் அறுவைச் சிகிச்சைக் கழிவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்குப் போது மான இடவசதி இன்மையால் எரிவாயு உருளைகளைக் களஞ்சியப்படுத்தும் இடம் அதற்காகப் பயன்படுத்தப் பட்டிருந்தது. மேலும், குப்பைகளை எரிப்பதற்காகக் குறிப்பிட்ட ஊழியரொருவர் ஈடுபடுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கஹவத்தை பிரதேச சபைக்குச் சொந்தமான நிலையான காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதால் பிரதேச சபையுடன் இணைந்து செயற்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அறுவைச்சிகிச்சை க் கழிவுகள் மற்றும் ஏனைய குப்பைகளை அகற்றுவதற்கு முறையான நடைமுறையொன் று உருவாக்கப்பட வேண்டும். |

**1.5.8 தலைப்பு 812 - மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்**

**1.5.8.1 பின்னவலை ஆயுர்வேத பஞ்சகர்மப் பிரிவு**

**1.5.8.1.1 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபரகமுவ மாகாண பிரதான அமைச்சுச் செயலாளரின் 2025 செப்தெம்பர் 26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பஞ்சகர்மப் பிரிவின் பழைய கட்டிடத்தின் | பஞ்சகர்ம நிறுவனம் அமைந்துள்ள காணியின் உரிமை பற்றி பிரதேச சபையுடன் நிலவிய சிக்கலான நிலைமை | காணியின் உரிமையைத் தீர்த்துக்கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| கூரையைத் திருத்துவதற்கும் வண்ணம் பூசுவதற்குமாக ரூபா 8,387,525 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2026 மே வரையிலும் அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் கட்டிடம் பயன்பாடற்றுக் காணப்பட்டது. | காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவுபடுத்தி சொத்துக்களிலிருந்து அதிகபட்சப் பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.8.1.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பின்னவலை பஞ்சகர்மப் பிரிவு மற்றும் பின்னவலை ஆயுர்வேத மத்திய மருந்தகம் என்பன அமைந்துள்ள நிலப்பரப்பு இரம்புக்கனை பிரதேச சபையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும், குறித்தவாறு குத்தகைப் பணத்தைச் செலுத்தாமையால் நிலுவைக் காணி இறையாக ரூபா 3,414,000 செலுத்த வேண்டியிருந்தது. | செலுத்த வேண்டிய இறை தொடர்பில் சிக்கலான நிலைமையொன்று ஏற்பட்டதன் காரணமாக ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் இரம்புக்கனை பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோருடன் கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவையான காணி இறையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.9 தலைப்பு 813 - மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

**1.5.9.1 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி நாளில் மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்ட 944 கூட்டுறவுச் சங்கங்களில் 280 இயங்காத சங்கங்களும் 112 கலைக்கப் பட்டு வரும் சங்கங்களும் நிலவின. அதற்கமைய பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையில் 42 சதவீதம் இயங்காத மற்றும் கலைக்கப்படும் நிலையில் நிலவியமையினால், கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி | இச்சங்கங்கள் நீண்டகாலமாக இயங்காதிருந்த போதிலும் மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனக் கோரி உறுப்பினர்களின் கோரிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் அதிகளவிலான சங்கங்களைக் கண்காணிப்பதற்குப் போதுமான உத்தியோகத்தர்கள் (51 உத்தியோகத்தர்கள்) இன்மையும் ஓரளவு பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பதிவு செய்யப்பட்ட சங்கங்களை இயங்கு நிலையில் பேணிச் செல்வதற்குத் தேவையான உதவியையும் கண்காணிப்பையும் போதுமானளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல், கட்டுப்படுத்தல், ஆலோசனைக் சேவைகளை வழங்குதல், சங்கங்களைப் பரிசோதித்தல் மற்றும் கணக்குகளைக் கையாளுதல் தொடர்பிலான திணைக் களத்தின் பணிப் பொறுப்பு போதுமானளவில் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி யில் 03 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 05 சந்தர்ப்பங் களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 5,150,000 கூட்டுத்தொகையான கடனை மீளச் செலுத்துவதை உரிய சங்கங்கள் தவறவிட்டிருந்தன.<br>அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதி நாளில் வட்டியும் அடங்கலாக ரூபா 3,616,793 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | சீ/ச பம்பறபொட்டுவை பிட்டிகல சணச சங்கத்தின் கடன் செலுத்தி முடிக்கப்படாவிட்டால் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதன் மூலமும் சீ/ச இரம்புக்கனை மாவனல்லை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் கலைத்தல் நடவடிக்கைகள் மூலமும் அறவிடப்படும் என்பதுடன் சீ/ச புலத்கொஹுபிட்டிய வி.சே.ச. சங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2025 மே வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். |

**1.5.10. தலைப்பு 814 - மாகாண உள்ளூராட்சி திணைக்களம்**

**1.5.10.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன ான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 இன் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80(1) ஆம் பிரிவு | 2025 ஆம் ஆண்டில் சபரகமுவ மாகாணத்தின் 29 உள்ளூராட்சி மன்றங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 833 உறுப்பினர்களில் 432 உறுப்பினர்கள் 2026 மே 15 ஆம் திகதி வரையிலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை முன்வைத்திருக்கவில்லை. | 2026 மே 15 ஆம் திகதி வரையில் அதிகரித்த 833 உறுப்பினர்களில் 401 உறுப்பினர்கள் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை இவ்வலுவலகத்திற்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் படி செயற்பட்டு சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் | உள்ளூராட்சி ஆணையாளரினால் 2024 ஆம் 2025 ஆம் ஆண்டுகளில் 33 | உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களின் சமூக அபிவிருத்தி | முதன்மைப் புலனாய்வுகளைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாபனக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பந்தி | அடிப்படைப் புலனாய்வுகளுக்காக நியமிக்கப்பட்ட அடிப்படைப் புலனாய்வு உத்தியோகத்தர்களால் 2026 மே வரையிலும் புலனாய்வுகளைப் பூர்த்தி செய்து அறிக்கைகளை முன்வைத்திராததுடன், பொருத்தமானவாறு கால நீடிப்புகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாக உள்ளமையும், அவர்கள் அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறும் மனுப் பரிசோதனை களை ஆய்வு செய்தல், அலுவலகக் கண்காணிப்பு, செயலாற்றுகைப் போட்டியின் நடுவர் பணிகளில் ஈடுபடுதல், முதன்மைப் புலனாய்வுகள் ஆகிய அனைத்துக் கடமை களது அனைத்தையும் செய்ய வேண்டிய காரணத்தினால் புலனாய்வு வேலை கள் தாமதமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிறைவேற்றி அதற்கமைய உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(4) | உள்ளூராட்சி ஆணையாளரினால் 2024 ஆம் 2025 ஆம் ஆண்டுகளில் 21 சேதங் கள் மற்றும் நட்டங்கள் பரிசோதனைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களால் 2026 மே வரையிலும் அப்பரிசோதனைகளை பூர்த்தி செய்து அறிக்கைகள் முன்வைத்திருக்கவில்லை. | புலனாய்வு உத்தியோகத்தர்களும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இவ்வேலைகள் தாமதமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய வைத்து அதற்கமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.10.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சித் திணைக்களத் தின் 2025 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் பயன்பாடற்ற சொத்துக்கள், தேவைப்பாடு நிலவும் நிறுவனங்களை இனங்கண்டு பரிமாற்றம் செய்வதற்கும் ஒவ்வொரு உள்;ராட்சி மன்றத்தினதும் | 2025 ஆம் ஆண்டிற்குரியவாறு சபரகமுவ மாகாணத்தினுள் நிலவும் 29 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உரியவாறு மாகாண ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முதன்மை வரைவு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், | பயன்பாடற்ற சொத்துக்கள் மற்றும் குப்பை முகாமைத்துவத்திற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பை போதுமானளவில் |

| | | |
|---|---|---|
| கழிவு முகாமைத்துவத்திற்காக ஐந்து ஆண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 10 உள்ளூராட்சி மன்றங்களில் 01 முதல் 13 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி பயன்பாடற்றுக் காணப்படும் வாகனங்கள் மற்றும் இயந்திரத் தொகுதிகள் எதுவும் மீளாய்வாண்டினுள் அவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டிராததுடன் சபரகமுவ மாகாணத்தினுள் நிலவும் 29 உள்ளூராட்சி மன்றங்களினாலும் குப்பை முகாமைத்துவத்திற்காக ஐந்து ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதில் தொடர்ந்தும் திருத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றி ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வழங்கி ஐந்து ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.11 தலைப்பு 820 - மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் மாகாண அமைச்சு

### 1.5.11.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலாத் துறையின் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முன்னர் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வளாகம்/ காணிக்குச் சொந்தமான நிறுவனங்களிடமிருந்து உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டில் ரூபா 54,500,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போயிருந்தது. | அரசியல் அதிகாரசபை மற்றும் அரச நிறுவனங்களுடன் இணைந்து களப் பரிசோதனைகளை மேற்கொண்டு வாய்மொழி உடன்பாடுகளின் பேரில் வருடாந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்திற்காக யோசனைகள் உள்ளடக்கப்பபட்ட போதிலும் எழுத்து மூல உடன்பாடுகளைப் பெறும்போது அனுமதி கிடைக்காமையினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முன்னர் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வளாகம்/காணிக்குச் சொந்தமான நிறுவனங்களிடமிருந்து முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.11.2 முகாமைத்துவக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாகாண வீதி அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் கொலன்ன பிரதேச சபையின் கண்காணிப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 21 விளையாட்டு மைதான அபிவிருத்திச் செயற்திட்டங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட வேலை விடயமொன்றின் மூலம் உள்ளடக்கப்பட்டிருந்த அடுக்கப்பட்ட மண் பரப்புதல் மேலதிக வேலைப் விடயமாகவும் உள்ளடக்கப்பட்டு 38,872 கன மீற்றருக்காகக் கூட்டுத்தொகை ரூபா 5,928,010 அதிகமாக மதிப்பிடப்பட்டு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் குறித்த மேலதிக கொடுப்பனவுகளை அறவிடு வதற்கும் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று வேலைகளை முடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான ஒழுக்காற்றுப் பரிசோதனை வேலைகள் பிரதம செயலாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அப்பரிசோதனை வேலைகள் நிறைவடையவில்லை எனப் பிரதம செயலாளர் அலுவலகம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்றுப் பரிசோதனை வேலைகளை விரைவாக முடித்து மேலதிகக் கொடுப்பனவுகளை அறவிட வேண்டும். |
| (ஆ) | மாகாண வீதி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை மூலம் நிறைவேற்றப்பட்ட செயற் திட்டங்களின் சார்பாக ரூபா 17.87 மில்லியன் தவறான முறையில் செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 4.16 மில்லியன் வீணாகச் செலவிடப்பட்டிருந்தமை தொடர்பில் ஒழுக்காற்று வேலைகளை முடிப்பதற்கும் தவறான கொடுப்பனவுகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பான ஒழுக்காற்றுப் பரிசோதனை வேலைகள் பிரதம செயலாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் அப்பரிசோதனை வேலைகள் நிறைவடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்றுப் பரிசோதனை வேலைகளை முடித்துக்கொண்டு தவறான கொடுப்பனவுகளை அறவிட வேண்டும் |

### 1.5.12 தலைப்பு 830 - சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு

#### 1.5.12.1 மாகாண சமூக சேவைகள் நிதியம்

##### 1.5.12.1.1செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சமூக சேவைகள் நிதியத்தை நிறுவுதல் பற்றிய கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரமாணத்தின் படி வேறெந்த உதவித் திட்டத்திலிருந்தும் உதவி அல்லது நிவாரணம் கிடைக்கப்பெறாத மிகவும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களின் நபர்களின் நலனுக்காக இக் கட்டளைச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள யாதேனுமொரு முறையில் உதவி அல்லது நிவாரணங்களை வழங்க முடியுமான போதிலும், 06 பிரதேச செயலகப் பிரிவுகளில் மட்டுமே உதவி வழங்குவதற்குப் பொருத்தமான நபர்களை இனங்காண்பதற்கான கணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டில் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் 09 பயனாளிகளுக்கு மருத்துவ உதவியும் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் ஒரு பயனாளியொருவருக்கு வீடமைப்பு உதவியொன்றும் மட்டுமே வழங்கப்பட்டிருந்ததுடன், ஏனைய உதவிகள் அல்லது நிவாரணங்கள் எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் தொடர்ச்சியான விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தேவைப்பாடு உள்ள குறைந்த வருமானமுடைய விண்ணப்பங்களை முன்வைப்பது பலவீனமான மட்டத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ள மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள் மூலம் பயனாளிகளை இனங்காண்பதும் தொடர்நடவடிக்கை எடுப்பதும் செய்யப்பட வேண்டும். |

### 1.5.13 தலைப்பு 840 - கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார விவகாரங்கள் மாகாண அமைச்சு

#### 1.5.13.1செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாகாணத்தின் பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்திக்காக மாகாண கல்வி அமைச்சினால் 2025 ஆம் ஆண்டில் ரூபா 1,689,773,406 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டிலும் எதிர்வரும் சில ஆண்டுகளிலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட வேண்டிய பௌதீக வளங்கள் மற்றும் அவற்றின் | அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தற்போது ஓரளவு தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் பாடசாலைகளின் பௌதீக வசதிகள் தொடர்பான தகவல்களைப் பாடசாலை மட்டத்தில் உள்ளீடு செய்வதற்கு சிப்தத்துத் | தரவுத்தொகுதியை விரைவாக உருவாக்கி பாடசாலைகளுக்கு பௌதீக வளங்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் நிதி ஒதுக்கீடு |

| | | |
|---|---|---|
| முன்னுரிமை முறையான ஆய்வொன்றின் மூலம் தயாரிக்கப் பட்ட திட்டமும் தரவுத்தொகுதியும் அமைச்சிடம் இருக்கவில்லை. ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் கிடைக்கும் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தமையால் மாகாணத்தினுள் நிலவும் பாடசாலைகளுக்கிடையே பௌதீக வளங்கள் பகிர்ந்தளிப்பில் சமத்துவமின்மையொன்று நிலவியது. | தகவல் தொகுதியை மேம்படுத்துவது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.13.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபரகமுவ மாகாண முன்னாள் கல்வி அமைச்சரின் பதவியணியினர் பயன்படுத்திய கெப் (Cab) வண்டியொன்று 2017 ஜூன் 12 ஆம் திகதியன்று விபத்திற்குள்ளாகியிருந்த போதிலும், மாகாண நிதிய விதி 54.6 இன் பிரகாரம் விபத்து நடந்த திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கை 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு, கெப் வண்டி 05 ஆண்டுகளும் 08 மாதங்களுக்கும் பின்னர் அதாவது 2023 நவம்பர் 16 ஆம் திகதியன்று கல்வி அமைச்சிற்கு எடுத்து வரப்பட்டிருந்த போதிலும், திருத்த வேலைகள் சரியாகச் செய்யப்பட்டிராமையால் மாகாண நிதியத்திற்கு ரூபா 3.89 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. எனினும், அதற்காகப் பொறுப்புடைய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 104 இன் படி பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு 2025 செப்தெம்பர் 19 ஆம் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பில் புலனாய்வொன்றை மேற்கொண்டு பொறுப்புடைய தரப்பினரை இனங்கண்டு அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண கல்வி அமைச்சினால் புலனாய்வு வேலைகளை முடிப்பதற்காக 14 நாட்கள் முதல் 60 நாட்கள் வரையிலான காலப்பகுதி வழங்கப்பட்டிருந்த 10 முதன்மைப் புலனாய்வுகளின் வேலைகள் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் முடிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், தாமதமான காலம் 01 மாதம் முதல் 02 ஆண்டுகள் 8 மாதங்கள் வரையாக இருந்தது. அதே போன்று, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த 465 முறைப்பாடு களில் 359 முறைப்பாடுகள் பரிசோதனைகளை நடாத்தி அறிக்கைகளை முன்வைக்குமாறு அறிவித்து வலய அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.முதன் மைப் புலனாய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முதன்மைப் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முதன்மைப் புலனாய்வு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை விரைவுபடுத்த வேண்டும். |

### 1.5.13.3 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இரத்தினபுரி வலயம் மற்றும் நிவித்திகலை வலயம் என்பவற்றிற்குச் சொந்தமான 19 பாடசாலைகளில் ரூபா 5,476,646 செலவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தக் கைத்தொழில்களில் ரூபா 939,471 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | குறைபாடுகள் பூர்த்தியாகும் வரை தக்கவைப்புத் தொகையை விடுவிக்காமலிருப்பதற்கும் கொடுப்பனவுகள் தொடர்பில் பரிசோதனைகளை நடாத்துவதற்கும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பட்டியல்களைச் சான்றளிக்கும் செயன்முறையை மேலும் முறைப்படுத்துவதற்கும் மேலதிகக் கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.13.4 சபரகமுவ முன் பருவப் பிள்ளைப்பருவக் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை

#### 1.5.13.4.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபரகமுவ மாகாணத்தினுள் நிலவும் அனைத்து முன் பருவப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மையங்களைப் பதிவு செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் அதிகாரசபையின் பிரதான பணிப் பொறுப்பாகும் போதிலும், முன்பள்ளிகள் பெயர்ப்பட்டியலின் படி 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்த 1,549 முன்பள்ளிகளில் 489 முன்பள்ளிகள் தேவையான அளவுகோல்களைப் பூர்த்தி செய்யாமையினால் மீளாய்வாண்டிற்கான பதிவை நாளதுவரையாக்கியிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் அனைத்து முன்பள்ளிகளுக்கும் மீண்டும் விழிப்புணர்வூட்டி பதிவை நாளதுவரையாக்குவதற்கு எதிர்காலத்தில் சிறப்பு அவதானம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பதிவிற்காகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அனைத்து அளவுகோல்களையும் பூர்த்தி செய்து வைத்து முன்பள்ளிகள் அனைத்தையும் பதிவு செய்வதற்காக முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |

#### 1.5.13.4.2 செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 03 ஆண்டுகளை விடப் பழமையான ரூபா 543,650 கடன்களின் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது தவணை முறையில் பணம் செலுத்துவது மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.14 தலைப்பு 841 - மாகாண கல்வித் திணைக்களம்

#### 1.5.14.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 02 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 2,260,453 உம் 03 வலய அலுவலகங்களுக்குரியவாறு 2023 ஆம் ஆண்டிலிருந்து வங்கிக் கணக்கு இலக்கம் | புலமைப்பரிசில் தரவுத்தொகுதி இயங்காமல் உள்ளதால், அது இயல்பு நிலைக்கு வந்த பின்னர் அப்பணத்தையும் உரிய மாணவர்களுக்குச் செலுத்துவதற்கும் வைப்புகளைத் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை | புலமைப்பரிசில் தரவுத்தொகுதியை விரைவாக இயங்கு நிலைக்குக் கொண்டுவந்து புலமைப்பரிசில் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் வைப்புகளைத் தீர்த்து |

| | | | |
|---|---|---|---|
| | தவறானமையினால் வங்கியினால் நிராகரிக்கப்பட்ட ரூபா 1,077,000 புலமைப்பரிசில் பணமும் பொது வைப்புக் கணக்கில் பேணப்பட்டிருந்தன. | எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.14.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிவித்திகலை, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய மற்றும் பலங்கொட ஆகிய வலயங்களின் 48 பாடசாலைகளில் ஏற்பட்டிருந்த 48 சேதங்கள்.'.நட்டங்கள் தொடர்பில் அவை ஏற்பட்டு 04 மாதங்கள் முதல் 25 ஆண்டுகள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும், மாகாண நிதிய விதி 54.1 இன் பிரகாரம் செயற்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நட்டங்கள் 48 தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பில் நிதிய விதியின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளைத் தாமதமின்றி மேற்கொண்டு பொறுப்புடைய தரப்பினரை இனங்காண்பதற்கும் நட்டத்தை ஈடுசெய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எம்பிலிப்பிட்டிய வலயத்தின் பாடசாலைகளில் 2019 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த 07 சேதங்கள் நட்டங்களுக்காகப் பொறுப்புடையவர்களாக இனங்காணப்பட்டிருந்த 15 உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து ரூபா 940,403 அறவிடப்பட வேண்டும் என மாகாண நிதிய விதி 54.1.6 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 588,199 தொகையானது 2026 ஜூன் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகளின் பிரகாரம் விரைவாக அறவிடுதல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.14.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண கல்வித் திணைக்களத் தினால் திருத்த வேலைகளுக்காக அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திரத்தொகுதி அதிகாரசபைக்கு 2024 மே 21 ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்த 02 வாகனங்களுக்காக அந்நிறுவனம் முன்வைத்திருந்த விலைக் கோரல்களில் திருத்துவது பொருளாதார ரீதியாகப் பயனுள்ளதா என்பது பற்றிய பரிந்துரைகளுடன்கூடிய அறிக்கை யொன்றை முன்வைப்பதற்காக மூன்று பேர் அடங்கிய பரிசோதனைக் குழுவொன்று 2025 ஜூன் 02 ஆம் திகதியன்று நியமிக்கப் பட்டிருந்த போதிலும், 2026 மே 08 ஆம் திகதியான போதிலும் அது குறித்து பரிசீலித்துப் பார்த்து அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, திருத்த வேலைகளுக்காக 2018 - 2022 காலப்பகுதியினுள் குறித்த அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட 04 வாகனங்கள் 2026 ஆகஸ்ட் வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் உரிய வாகனங்கள் தொடர்ந்து ஒரேயிடத்தில் நிறுத்தப்பட்டிருப்பதனால் ஏனைய குறைபாடுகள் ஏற்படுவதற்கான அபாயமும் நிலவியது. | கெப் வண்டிகளைத் திருத்துவது பொருளாதார ரீதியாகப் பயனுள்ளதா என்பதைத் தீர்மானிக்க நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தீர்மானம் கிடைத்த பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018-2022 காலப்பகுதிக்குரிய 04 வாகனங்களில் 03 வாகனங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஏனைய வாகனத்தைத் திருத்துவது பொருளாதார ரீதியாகப் பயனுள்ளதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் திருத்த மற்றும் பராமரிப்பு வேலைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாதாயின் அவ்வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.14.4 கல்விப் பதவியணிப் பற்றாக்குறைகளும் மேலதிகங்களும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு முடிவில் சபரகமுவ மாகாணத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பதவியணி 24,401 ஆகவிருந்த துடன், உள்ளபடியான பதவியணி 20,407 ஆக அமைந்தமையினால் 3,994 ஆசிரியர்கள் பற்றாக்குறை | 2026 ஆம் ஆண்டில் 1,997 ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் ஆசிரியர் சமநிலையைப் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலவியது. அதற்கமைய மாகாணத்தின் அனைத்து வலயங்களிலும் ஆசிரியர் பதவியணிப் பற்றாக்குறை யொன்று நிலவியது. | | |
| (ஆ) | சபரகமுவ மாகாணத்தின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் உதவி அதிபர் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,453 ஆகவிருந்ததுடன், உள்ளபடியான பதவியணி 783 ஆக இருந்தமையால் பற்றாக்குறை 670 ஆக இருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் ஆசிரியர் சமநிலையைப் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சிரேஷ்ட மட்டத்திலான 27 பதவிகள் பற்றாக்குறையாக நிலவியதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் மேலதிகம் காரணமாக இரண்டாம் நிலை மட்டத்திலான 1,805 பதவிகள் மேலதிகமாக நிலவின. | மேலதிகம் மற்றும் பற்றாக்குறைகள் காலாண்டு ரீதியாகவும் தேவைப்பாட்டின் படியும் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15 தலைப்பு 850 – காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம், மீன்பிடி நடவடிக்கைகள் மாகாண அமைச்சு

#### 1.5.15.1 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முருத்தகெட்டிய குளம் மீன்பிடி வீதியை அபிவிருத்தி செய்யும் நிர்மாணப்பணியின் ஒரு பணி விடயத்திற்கு 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்குரிய மாகாண வீதிப் பெறுமானங்களுக்கு (HSR) பதிலாக, 2024 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டிற்குரிய வீதிப் பெறுமானங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமையினால் ரூபா 353,220 மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறித்த நிர்மாணப்பணிக்காக மதிப்பீடுகளைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில், தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு புதிய பெறுமானங்கள் தொடர்பான மாற்றத்தை அடையாளம் காண முடியாமற்போனமையினால், பணி விடய இலக்கம் 04 Preparing stock piling premix பணிக்கு 2024 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டிற்குரிய கட்டணம் சேர்க்கப்பட்டுள்ளது. | மேலதிகக் கொடுப்பனவுகளை ஒப்பந்தக்காரரிடமிருந்தோ அல்லது அங்கீகரித்த உத்தியோகத்தரிடமிருந்தோ மீளறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.5.15.2 தாமதமான செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம், மீன்பிடி நடவடிக்கைகள் அமைசசினால் சாத்தியக்கூறு ஆய்வின்றி செயற்திட்டங்களைத் திட்டமிட்டிருந்தமையால், 2025 வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் ரூபா 13,860,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த வாகொல்ல மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் 05 செயற்திட்டங் கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்க வில்லை. அதில் உள்ளடக்கப் பட்டுள்ள ரூபா 08 மில்லியன் பெறுமதியான வாகொல்ல மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் உணவகத்தைக் நிர்மாணிக்கும் நிர்மாணப்பணிக் காக 2026 அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும் ரூபா 30 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. ’ | மா ஓயா காப்பகத்தை அண்டி இக்கட்டிடம் அமைந்துள்ளமையால் இந் நிர்மாணப்பணிக்காக நீர்ப்பாசனப் பொறியிய லாளர் அலுவலகத் திடமிருந்து உடன்பாடு கோரப்பட்ட போதிலும், அதற்கான பதில் கிடைக்கப்பெறாமையினால் நிர்மாணப் பணியை நடைமுறைப்படுத்த முடியாமற்போனது. எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டத்தில் செயற்திட்டங்களை உள்ளடக்குவதற்கு முன்னர் முறையான சாத்தியக்கூறு ஆய்வின் பின்னர் நடைமுறைப் படுத்தக்கூடிய அத்தியாவசிய யோசனைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டத்தில் செயற்திட்டங்களை உள்ளடக்கும் போது, முறையான சாத்தியக்கூறு ஆய்வின் பின்னர் நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்திட்டங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.5.16 தலைப்பு 851 - மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

#### 1.5.16.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 112,515,138 காணி குத்தகை மீதி நிலுவையாகக் காணப்பட்டது. அதில் 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காணி குத்தகை நிலுவைப் பெறுமதியாக ரூபா 82,768,987 ஆகக் காணப்பட்டதுடன், அது காணி குத்தகைப் பணத்தில் மொத்த நிலுவையின் 73 சதவீதமாகும். | நிலுவை வரிகளை அறவிடுவது சம்பந்தமாக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி நிலுவை வரி செலுத்துவோருக்குத் தெளிவுபடுத்துதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நிலுவை வருமானங்களை அறவிடுவதனை வினைத்திறனானதாக்க வேண்டும். |

**1.5.16.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் தொடர்பாடல் கம்பனியொன்றினால் களவாணை பிரதேச செயலகப் பிரிவின் தபஸ்ஸரகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் குருளேகம வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள முறையே 20 பேர்ச்சஸ் மற்றும் 15.1 பேர்ச்சஸ் கொண்ட 02 காணித் துண்டுகளில் தொலைபேசி ஒளிபரப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டு முறையே 2008 ஜூன் 04 மற்றும் 2015 மார்ச் 22 ஆம் திகதி முதல் அலைவரிசைப் பரப்புகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. ஆயினும், மீளாய்வாண்டு நிறைவடையும் வரையிலும் காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்று அக்காணிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்கி குத்தகைப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாகக் குத்தகை அங்கீகாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நினைவூட்டல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாகக் குத்தகை அங்கீகாரத்தைப் பெற்று உரிய காணித் துண்டுகளை நீண்டகால குத்தகைக்கு வழங்கி வருமானங்களை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.16.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் நீண்டகாலக் குத்தகை, பயனுறு குத்தகை, வருடாந்த அனுமதிப்பத்திரம் மற்றும் நீரைத் திருப்பி விடுவதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய குத்தகைப்பணத்தை அறவிடும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவை வழங்குவதற்கு 2009 ஆகஸ்ட் 12 ஆம் திகதிய 2009/67 ஆம் இலக்க சபரகமுவ மாகாண அமைச்சரவைத் | மேற்குறித்த காணிக் கையளிப்பானது அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எவ்வித குத்தகை வகையிலும் அடங்காத, இரண்டு அரச நிறுவனங்களுக்கு இடையே காணியின் உரிமையை பரிமாற்றம் செய்வதாக மட்டுமே அமைந்தமையினால், குறித்த ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவை அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணான முறையற்ற கொடுப்பனவாகியுள்ளது. | இக்காணி கையளிப்பானது அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எவ்வித குத்தகை வகையிலும் அடங்காமையினால், முறையற்ற அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள ஊக்குவிப்புப் படியை மீள அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப் பட்டிருந்தது. அவ்வங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவின் தெமுவாவதவில் அமைந்துள்ள 22 பேர்ச்சஸ் அரச காணித் துண்டொன்றை 2018 ஜுலை 11 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைவாக 2024 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியான ரூபா 132.6 மில்லியனை அறவிட்டு, கொடைப் பத்திரத்தின் மூலம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்குக் கையளிக்கும் போது, அத்தொகையில் 11 சதவீதம் அதாவது ரூபா 14.59 மில்லியனை ஊக்குவிப்புப் படியாக 43 மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கும் இரத்தினபுரி பிரதேச செயலகத் தின் 09 உத்தியோகத்தர் களுக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | காணித் துண்டிற்குரிய அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியை முழுமையாக அறவிட்டு, நிபந்தனையற்ற கொடைப் பத்திரத்தை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அது குத்தகையின் கீழ் அடங்குகின்றது. | |
| (ஆ) | 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தப்பட்ட) சட்டத்தினாலும் திருத்தப்பட்ட காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் காணி ஒழுங்குவிதிகள் 173 இன் மூலம், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றிற்காக அறவிடப்பட வேண்டிய வருடாந்தத் தவணைப் பணங்களைச் சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு, சேகரிக்கப்படும் தொகையில் 10 சதவீதத்திற்கு மிகையல்லாத தரகுப் பணத்தைச் செலுத்துவதற்கு நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏவ்வாறெனினும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்கு அப்பால் பிரதேச செயலகங் களின் உத்தியோகத்தர்களுக்கு 08 சதவீதமும், மாகாண காணி | மாகாண சபைக்குக் அறவிடப்பட வேண்டிய குத்தகைப்பணத்தை அறவிடும் உத்தியோகத்தர்களுக்கு 2007 ஆம் ஆண்டிலிருந்து ஊக்குவிப்புப் படி வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | காணி அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடு களுக்கு அப்பாற்பட்டு படிகளைக் கொடுப்பனவு செய்தலாகாது. மாகாண அமைச்சரவைக்கு யோசனைகளை முன்வைக்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களை மீறாத வகையில் குறித்த யோசனைகளைத் தயாரித்து வழங்குவதற்கு மேல் முகாமைத்துவம் எப்போதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், முறையற்ற அங்கீகாரத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள தொகைகள் அறவிடப்பட வேண்டும். |

ஆணையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு 02 சதவீதமும், வரவேற்புப் பணி களுக்காக (மாகாண சபை மற்றும் பிரதேச செயலகம்) உத்தியோகத்தர்களுக்கு 01 சதவீதமும் என 11 சதவீத ஊக்குவிப்புப் படியைச் செலுத்துவதற்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

## 1.5.17 தலைப்பு 852 - மாகாண விவசாயத் திணைக்களம்

### 1.5.17.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இளம் விவசாயி விவசாயப் பூங்காவொன்றை அமைப்பதற்காக 2023-2025 மூன்றாண்டுத் திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த எம்பிலிப்பிட்டிய விவசாயப் பூங்காவிற்காக 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் ரூபா 4,170,827 செலவிடப்பட்டிருந்த போதிலும், விவசாயப் பூங்காவை அமைப்பதன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தவறியிருந்தது. | அமைந்துள்ள காணியின் உரிமை தீர்க்கப்படாமையினால் பயிர் வகைகளைப் பயிரிடுவது தாமதமானது. 2026 ஆம் ஆண்டிற்காக உற்பத்தித் திட்டமும் பயிற்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | காணியின் உரிமையைத் தீர்த்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் முறையான திட்டமிடலுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.17.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தப் பெறுகைத் திட்டத்தின் மூலம் ரூபா 33,123,975 பெறுமதியான காய்கறி மற்றும் பழக் கன்றுகளைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காய்கறி மற்றும் பழக் கன்றுகளின் பெறுமதி ரூபா 9,094,551 ஆக இருந்தது. | செயற்திட்டங்களுக்கு அங்கீகாரம் கிடைக்காமையினால் சுமார் ரூபா 15 மில்லியன் பெறுமதியான கன்றுகளைக் கொள்வனவு செய்ய முடியாது போயிற்று. திணைக்களத்திற்குத் தேவையான கன்றுகள் குறித்துப் பண்ணைகளிடம் வினவி விநியோகிக்கக்கூடிய அளவைக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் | திணைக்களத்தின் கன்றுத் தேவையை ஆண்டின் ஆரம்பத்தில் அடையாளம் கண்டு, பண்ணைகளுக்குள் உற்பத்தி செய்து கொள்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன், வருடாந்த வரவு செலவுத் திட்டம் |

அத்துடன், திணைக்களத்திற்குச் சொந்தமான 03 பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 5,191,200 பெறுமதியான 18,757 கன்றுகள் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் எஞ்சியிருந்த நிலையில், ரூபா 2,059,745 பெறுமதியான 33,766 கன்றுகள் வெளித்தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்டிருந்தன. அதற்கமைய, திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு இடையே யான ஒருங்கிணைப்பின் மூலம் தேவையான கன்று வகைகளைத் திணைக்களப் பண்ணைகள் மூலம் பெற்றுக்கொள்வது குறித்து அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மட்டுமே பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன், சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திணைக்களத்திற்குச் சொந்தமான பண்ணைகளிலிருந்து கன்றுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

.